**முல்லைப் பெரியாறு பிரச்னை: மதுரையில் காய்கறிச் சந்தைகள் மூடல், ஆர்ப்பாட்டம்**

First Published : 19 Dec 2011 01:27:51 AM IST

மதுரை, டிச. 18: முல்லைப் பெரியாறு பிரச்னையில் கேரள அரசின் போக்கைக் கண்டித்து மதுரையில் காய்கறிச் சந்தைகள் ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டன. ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட போராட்டங்களும் நடைபெற்றன.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னை தொடர்பாக கேரள அரசைக் கண்டித்து கடந்த சில நாள்களாக மதுரையில் பல்வேறு அமைப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நகரில் உள்ள அனைத்து உழவர் சந்தைகளும் மூடப்பட்டன. உழவர் சந்தைக்கு காய்கறிகள் கொண்டுவந்து விற்கும் விவசாயிகள், சொக்கிகுளம் உழவர் சந்தை முன்பு கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைப் பெரியாறு அணையில் நீர் தேக்கும் அளவை உயர்த்தவேண்டும், கேரள அரசு புதிய அணை கட்டும் திட்டத்தை தடுக்கவேண்டும் என அவர்கள் கோஷம் எழுப்பினர்.

மதுரை மாட்டுத்தாவணி அருகே சென்ட்ரல் மார்க்கெட்டில் உள்ள சுமார் 1600 கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. இதனால் எப்போதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும் அந்த மார்க்கெட் வெறிச்சோடிக் காணப்பட்டது. பல கோடி வர்த்தகம் பாதிக்கப்பட்டதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்து இளைஞர் பேரவை: ப் பரியார் பஸ் நிலையம் கட்டபொம்மன் சிலை பகுதியில் இந்து இளைஞர் பேரவையினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் வேனில் எருமை மாட்டை கொண்டு வந்து, அதன் மீது கேரள முதல்வரின் உருவபொம்மையை ஏற்றிவந்தனர்.

பின்னர் உருவபொம்மையை எரிக்க முயன்றனர். இதையடுத்து இந்து இளைஞர் பேரவையைச் சேர்ந்த பார்த்தசாரதி உள்ளிட்ட 15 பேரை திலகர் திடல் போலீஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

வணிகர்கள் போராட்டம்: மதுரை தெற்குவாசல் பல்பொருள் வியாபாரிகள் சங்கம் சார்பில் சின்னக்கடை வீதி பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சங்கத் தலைவர் ராஜபாண்டி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 45 பெண்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

அப்பகுதியில் பலசரக்குக் கடைகள், தெற்குவாசல் மார்க்கெட்டில் உள்ள காய்கறிக் கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன.

ரேஸ்கோர்ஸ் மைதானப் பகுதியில் உள்ள நடையாளர் சங்கத்தினர் சுப்பாராவ் தலைமையில் கேரள அரசின் போக்கைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழன்னை ஆட்டோக்கள் கூட்டுறவு சொசைட்டி ஒருங்கிணைப்புக் குழு சார்பில் வசந்த நகர் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

புறநகர் பகுதியில்: புறநகரில் அப்பன் திருப்பதி, சுந்தரராஜன்பட்டியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

அவனியாபுரத்தில் பொதுமக்கள் சார்பில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் 400-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

மேலவளவு அருகே உள்ள கிடாரிபட்டியில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் விவசாயிகள் சங்கத்தை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

ஊமச்சிகுளம் வங்கி காலனி பகுதியில் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தினர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் உள்ள கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன.

**உணவுப் பாதுகாப்பு மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை அனுமதி**

First Published : 19 Dec 2011 03:21:14 AM IST

புது தில்லி, டிச. 18: அனைவருக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்யும் உணவுப் பாதுகாப்பு மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஞாயிற்றுக்கிழமை அனுமதி அளித்தது.

இந்த மசோதாவின் மூலம் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 63.5 சதவீத மக்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிலோ அரிசி ரூ. 3: புதிய மசோதாவின்படி முன்னுரிமைப் பிரிவைச் சேர்ந்த (வறுமைக் கோட்டுக்கு கீழ் வசிப்போர் உள்ளிட்ட பிரிவினர்) குடும்பங்களில் ஒரு நபருக்கு மாதத்துக்கு 7 கிலோ உணவு தானியமும், பொது வகை குடும்பங்களில் ஒரு நபருக்கு குறைந்தபட்சம் 3 கிலோ உணவு தானியமும் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் அரிசி ரூ. 3, கோதுமை ரூ. 2, பருப்பு வகைகள் ரூ. 1 விலையில் விநியோகம் செய்யப்படும்.

இப்போது உணவு மானியத்துக்காக ரூ. 63 ஆயிரம் கோடி வழங்கப்பட்டு வருகிறது, புதிய சட்டம் அமலுக்கு வரும்போது ரூ.1.2 லட்சம் கோடி வரை மானியத் தொகை உயரக்கூடும் என்று தெரிகிறது.

முதற்கட்டமாக உணவு மானியத்துக்காக ஆண்டுக்கு ரூ.27,663 கோடியை கூடுதலாக ஒதுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மேலும், உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க வேளாண் துறையில் ரூ.1,10,600 கோடியை முதலீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் இப்போது 5.5 கோடி டன் உணவு தானியம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தப்படும்போது 6.1 கோடி டன் உணவு தானியம் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகளுக்கு உதவித் தொகை: ஊட்டச்சத்து குறைபாடால் பாதிக்கப்பட்டிருக்கும் கர்ப்பிணிகளுக்கு 6 மாதங்களுக்கு தலா ரூ.1,000 வழங்க மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி நாடு முழுவதும் சுமார் 2.25 கோடி கர்ப்பிணிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த, 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு சரிவிகித ஊட்டச் சத்து உணவு வழங்கப்படும்.

வீடற்றோர், ஆதரவற்றோர், வறுமையில் வாடுவோர், இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கும் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு இலவச உணவு அல்லது குறைந்த விலையில் உணவு வழங்கப்படும். இவை உள்பட மேலும் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

2009 மக்களவைத் தேர்தலின்போது காங்கிரஸ் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், உணவுப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகளான நிலையில் இப்போது அந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

**வேளாண் இடுபொருள்கள் வழங்கும் விழா**

First Published : 18 Dec 2011 10:11:01 AM IST

உளுந்தூர்பேட்டை, டிச. 17: விழுப்புரம் மாவட்டம் திருநாவலூர் ஒன்றியம் வ. சின்னக்குப்பம் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கும் விழா மற்றும் வேளாண் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருநாவலூர் வேளாண்மை உதவி இயக்குநர் ரவீந்திரன் தலைமை வகித்தார். பட்டு வளர்ச்சித்துறை சார்பில் 20 விவசாயிகளுக்கு ரூ.25 லட்சத்து 16 ஆயிரம் மதிப்பிலான

இடுபொருள்களை அவர் வழங்கினார். மேலும் தோட்டக்கலைத்துறை சார்பில் 5 ஆயிரம் திசு வாழைக்கன்றுகளும், வேளாண்மைத்துறையில் 50 பேருக்கு உளுந்து விதைகளும் வழங்கப்பட்டன.

பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர்கள் ரங்கநாதன், ராஜதிலகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோட்டக்கலைத்துறை உதவி வேளாண் அலுவலர் ஜோதிராமன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் கண்ணன் உட்பட விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**தேயிலையைத் தாக்கும் சிவப்பு சுனாமி நோய்: கவலையில் தேயிலை விவசாயிகள்**

First Published : 18 Dec 2011 10:51:25 AM IST

கோத்தகிரி, டிச. 17: கோத்தகிரியில் கடும் உறை பனி கொட்டுவதால் பசுந்தேயிலை செடிகளில் சிவப்பு கொப்புள சுனாமி நோய் தாக்கியுள்ளதால் தேயிலை விவசாயிகள் மிகவும் கவலையில் உள்ளனர்.

÷நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா மற்றும் விவசாயம் அதிகளவில் உள்ளது. ஆனால் கோத்தகிரி மட்டும் பசுந்தேயிலையை மட்டுமே நம்பியுள்ளது. தேயிலையைத் தவிர சில இடங்களில் தட்ப வெட்ப நிலைக்கேற்ப காய்கறி விவசாயம் செய்யப்படுகிறது. ஆனால் கோத்தகிரியின் பொருளாதாரம் முக்கியமாக இந்த பசுந்தேயிலையை மட்டுமே நம்பியுள்ளது.

÷இங்கு தேயிலை விளைச்சல் குறைந்தாலோ அல்லது விளைச்சல் அதிகரித்து விலை குறைந்தாலோ விவசாயிகள் மட்டுமல்ல இப்பகுதி மக்களின் பொருளாதாரம் ஸ்தம்பித்துவிடும். அதன்பின் தேயிலை விவசாயிகள் வேலையாட்களுக்கு கூலி கொடுப்பதற்கே பற்றாக்குறை ஏற்பட்டு வெளியில் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

÷கடந்த மாதங்களில் கன மழை பெய்ததால் தேயிலை செடிகள் செழித்து வளர ஆரம்பித்த நிலையில் பசுந்தேயிலை விலை கடும் வீழ்ச்சியைச் சந்தித்தது. அதன் பின் தொடர்ந்து கடும் பனியால் தேயிலைச் செடிகள் கருகின. இந்த நிலையில் பசுந்தேயிலையின் விலை கடந்த வாரத்தைவிட சற்று கூட ஆரம்பித்தது.

÷விலை கூடியதால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் இருந்தனர். மிகவும் செழிப்பாய் வளர்ந்திருந்த பசுந்தேயிலை செடிகளை, உறை பனியின் காரணமாக சிவப்பு

சுனாமி எனப்படும் கடும் நோய் தாக்கியது.

÷நோய் தாக்கிய தேயிலை எதற்கும் பயன்படாது என்பதால் அவற்றை அப்படியே செடியில் விட்டு விடுகிறார்கள்.

÷இதனால் தங்களின் கண்ணீரைத் துடைத்திட தமிழக அரசு உதவிட வேண்டும் என்பது இப்பகுதி விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 85.91 அடி

First Published : 18 Dec 2011 10:56:28 AM IST

ஈரோடு, டிச.17: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை 85.91 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 643 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி, வாய்க்காலில் விநாடிக்கு 2,300 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 19.02 டிஎம்சி.

## வேளாண் பல்கலை. விஞ்ஞானிக்கு தேசிய விருது

First Published : 18 Dec 2011 11:01:40 AM IST

கோவை, டிச.17: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் நோயியல் துறை பேராசிரியர் வே.பிரகாசத்திற்கு டாக்டர் பி.பி.முன்ட்குர் நினைவு விருது வழங்கப்பட்டது.

ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற இந்திய பயிர் நோயியல் சங்கத்தின் தேசிய பயிர் நோயியல் கருத்தரங்கில் சங்கத் தலைவர் தி.எஸ்.திண்டு முன்னிலையில் பேராசிரியர் ரவி கேத்தர்பால் விருதை வழங்கினார்.

பயிர் நோயியல் துறையில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சியில் ஆற்றிய பெரும் பங்களிப்பை அங்கீகரித்து இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் காளான் வளர்ப்பு, தோட்டக்கலை சார்ந்த நோயியல் மற்றும் உயிரியல் முறை நோய் கட்டுப்பாடு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்.

இவர் சாம்பல் நிற சிப்பிக்காளான் சாகுபடியின் தொழில்நுட்பத்தையும், வைக்கோல் காளானில் உருளைப் படுக்கை முறையையும் உருவாக்கியுள்ளார்.

மேலும், வணிக நோக்கில் சாகுபடியை மேற்கொள்ள பால் காளானில் டிரைக்கோலோமா ஜைஜான்ஷியம் என்ற புதிய காளான் வகையையும் கண்டறிந்துள்ளார்.

இவர் பல பயிர்களை தாக்கும் நோய்களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டதன் பயனாக வெண்ணெய், பழம், சில்வர் ஓக், லவங்கப்பட்டை,

மாதுளை, ஆரஞ்சு, மிளகு, கொத்துமல்லி, சோம்பு, ஜாதிக்காய், வெந்தயம், கிராம்பு, திராட்சை மற்றும் காட்டாமணக்கு ஆகிய பயிர்களை தாக்கும் 15 நோய்களைக் கண்டறிந்துள்ளார்.

இத்தகவலை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

தினமலர்
உண்மையின் உரைகல்

**வாழை மரத்தின் பக்கவாட்டில் குலை தள்ளிய அதிசயம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,01:56 IST

விக்கிரமசிங்கபுரம் : விக்கிரமசிங்கபுரம் அருகே கல்சுண்டு காலனியில் வாழை மரத்தின் பக்கவாட்டில் குலை தள்ளி அதிசயமாக காட்சியளித்தது. கல்சுண்டு காலனி கீழத்தெருவை சேர்ந்தவர் சமுத்திரம் (55). விவசாயி. இவருக்கு சொந்தமான வயலில் வாழை பயிரிட்டுள்ளார். அதில் ஒரு வாழை மரத்தில் பக்கவாட்டில் குலை தள்ளி அதிசயமாக காணப்பட்டது. பொதுவாக வாழைமரத்தில் மேல் பாகத்தில் குலை தள்ளப்பட்டு வாழைப்பூ நீளமாக வளர்ந்து பிறகு வாழைக்காய் உருவாகும். ஆனால் இந்த வாழை மரத்தில் பக்கவாட்டில் தண்டு உருவாகியதுடன் வாழைப்பூவும் சிறியதாக இருக்கும் நிலையில் வாழைகாய்கள் உருவாகியிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மஞ்சள் பயிரில் நோய் தாக்குதல் தீவிரம் உற்பத்தி பாதிப்பால் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,03:05 IST

பனமரத்துப்பட்டி:பனமரத்துப்பட்டி பகுதியில், மஞ்சள் பயிரில் இலை கருகல், இலைப்புள்ளி நோய் மற்றும் கிழங்கு அழுகல் நோய் தாக்குதல் தீவிரம் அடைந்துள்ளது. இதனால், மஞ்சள் உற்பத்தி கடுமையாக பாதிக்கும் என, விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.பனமரத்துப்பட்டி பகுதியில், தோட்டக்கலைத்துறை பயிர்களான, அரளி, மஞ்சள், மா, கொய்யா, வாழை உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில், குவிண்டல் ஒன்று, 20 ஆயிரம் வரை விலை உயர்ந்த மஞ்சள், பின் படிப்படியாக விலை சரிந்தது. இதனால், பல விவசாயிகள், மஞ்சளை விற்பனை செய்யாமல் இருப்பு வைத்தனர்.
நடப்பாண்டில், மஞ்சள் விலை உயரும் என எதிர்பார்த்த விவசாயிகள், அதிக அளவில் மஞ்சள் பயிரிட்டனர். ஆனால், குவிண்டல் மஞ்சள், 4,000 வரை விலை சரிந்ததால், மஞ்சள் பயிரை பராமரிக்க, விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.

அதனால், மஞ்சள் பயிரில் இலை கருகல், இலைப்புள்ளி மற்றும் கிழங்கு அழுகல் நோய் தாக்குதல்

தீவிரம் அடைந்துள்ளது.மஞ்சள் இலை நுனியில், முதலில் கரும்பழுப்பு நிற புள்ளிகள் தோன்றி, நாளடைவில் அவை பெரிதாகி, இலை முழுவதும் காய்ந்து சருகாக மாறிவிடுகிறது. நோய் தாக்குதல் தீவிரம் அடையும் சமயத்தில், வயல் பகுதி முழுவதிலும் இலைகள் காய்ந்து கீழே விழுகிறது.

கிழங்கு அழுகல் நோய் தாக்கிய மஞ்சள் பயிரில், இலை முழுவதும் மஞ்சள் நிறமாகி, தண்டு வரையில் பரவி, இளங்குருத்து பாதிக்கப்பட்டு, வேர் வளர்ச்சி குன்றிவிடுகிறது. இதனால், மஞ்சள் கிழங்கு வளர்ச்சி பாதிக்கப்பட்டு, கிழங்கில் நீர்க்கசிவு தோன்றி, பின் பழுப்பு நிறமாக மாறி அழுகி விடுகிறது.நோய் தாக்கிய செடியை கையில் தொட்டால், கையோடு வந்துவிடுகிறது. மஞ்சள் செடியில் அழுகிய நிலையில் இருக்கும் கிழங்கில் இருந்து, துர்நாற்றம் வீசுகிறது. விலை சரிவு, நோய் தாக்குதல் ஆகிய காரணங்களால், மஞ்சள் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம், பயிர் பாதுகாப்பு துறை உதவி பேராசிரியர் கீதா ஆகியோர் கூறியதாவது:இலைப்புள்ளி மற்றும் இலைக் கருகல் நோய் தாக்கிய வயலில், மேன்கோசெப் இரண்டு கிராம், கார்பென்டாசின் இரண்டு கிராம் மற்றும் ஒட்டும் திராவகம் ஒரு மி., ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 15 நாட்கள் இடைவெளியில், காப்பர் ஆக்சி குளோரைடு மூன்று கிராம், டீபால் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.கிழங்கு அழுகல் நோய் மண்ணில் இருக்கும் பூஞ்சணம் மற்றும் நோய் தாக்கிய விதை கிழங்கு மூலம் பரவுகிறது. விதை கிழங்குகளை, காப்பர் ஆக்சிகுளோரைடு மூன்று கிராம் அல்லது கார்பன்டசிம் ஒரு கிராம் தண்ணீரில் கலந்த கரைசலில் ஊறவைத்து, நிழலில் உலர்த்தி, பின் நடவு செய்யவேண்டும்.டிரைக்கோடெர்மா விரிடி என்ற நன்மை செய்யும் பூஞ்சணத்தை ஹெக்டேருக்கு, 2.5 கிலோ என்ற அளவில், 100 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். இந்த பூஞ்சணம், மண்ணில் இருக்கும் கிழங்கை சுற்றி பாதுகாப்பு வளையம் போல் செயல்படும்.இதனால், கிழங்கு அழுகல் நோய் தாக்காமல், மஞ்சள் கிழங்கு பாதுகாக்கப்படும். இந்த நோய், மண் மூலம் பரவகூடியது என்பதால், நோய் தாக்கம் இருந்த வயலில், மாற்று பயிர் சாகுபடி செய்ய வேண்டும். தண்ணீர் தேங்காத வடிகால் வசதி உள்ள வயல்களில், மஞ்சள் சாகுபடி செய்ய வேண்டும்.இதுபோன்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டால், மஞ்சளில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தி, மகசூல் இழப்பை தடுக்கலாம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## பருத்தி ஏலத்தில் 250 மூட்டை விற்பனை

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,03:11 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 250 மூட்டை பருத்தி, மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர்,

புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஞாயிற்றுக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடந்து வருகிறது. ஏலத்துக்கு, ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள், பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.நேற்று நடந்த ஏலத்தில், பி.டி., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,829 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,059 ரூபாய்க்கும், டி.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,789 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,029 ரூபாய்க்கும், கொட்டு பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 1,589 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 1,769 ரூபாய்க்கும் விற்பனையானது.
ஏலத்தில், 250 மூட்டை பருத்தி, மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.40 லட்சம் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,03:12 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,100 மூட்டை மஞ்சள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.கடந்த மார்ச் மாதம் முதல் மஞ்சள் விலை, சரிவை நோக்கிச் சென்றது. அதனால், விவசாயிகள், அறுவடை செய்த மஞ்சளை விற்பனை செய்யாமல், விலை உயர்வை எதிர்பார்த்து, இருப்பு வைத்தனர்.தொடர்ந்து, நடந்து வரும் மஞ்சள் ஏலத்தில் விலை உயர்வு ஏற்படாததால், இருப்பு வைத்துள்ள மஞ்சளை, விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,669 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 5,319 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,469 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,469 ரூபாய்க்கும் விற்பனையானது.ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 310 ரூபாய் விலை உயர்ந்துள்ளது. உருண்டை மஞ்சள், 140 ரூபாய் விலை குறைந்துள்ளது. விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 1,100 மூட்டை மஞ்சள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.கடந்த இரண்டு வாரங்களாக, விரலி மஞ்சள் விலை, உயர்வை நோக்கி செல்வதால், மஞ்சள் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**சர்க்கரை ஆலையை கூலி ஆலையாக மாற்ற விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,03:43 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: "சர்க்கரை ஆலைகளை; கூலி அரவை ஆலைகளாக மாற்ற வேண்டும்' என, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி கூறியுள்ளார்.அவர் கூறியதாவது:

இந்திய அரசு கரும்புக்கான விலையை நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டாம். தமிழக அரசும் ஆதரவு விலையை கொடுக்க சொல்லி சர்க்கரை ஆலை நிர்வாகத்தை நிர்ப்பந்திக்கவும் வேண்டாம். விவசாயிகள் கொடுக்கும் கரும்புக்கு ஆலை நிர்வாகம் பணம் கொடுக்கவும் வேண்டாம்.கரும்பிலிருந்து பெறப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான சர்க்கரை, காகிதம், மின்சாரம், ஆல்கஹால், மது ஆகியவற்றை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளுக்கு கொடுத்து விட வேண்டும். அதற்கான கூலியை விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.அந்தந்த சர்க்கரை ஆண்டுக்கான அரவை கூலியை அரசு நடுவராக இருந்து நிர்ணயம் செய்து வெளியிட வேண்டும்.விவசாயிகள் கொடுக்கும் கூலி குறைவாக இருந்தால், ஆலைகள் அரசிடம் முறையிட்டு கூலியை மாற்றிக் கொள்ளலாம். இவ்வாறான போக்கு இருந்தால், ஆலைகள் நஷ்டப்பட வேண்டியதில்லை."விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பதில்லை.இவர்களுடைய வாழ்க்கைத் தரம் வீழ்வதற்கும் வாங்கும் சக்தி குறைவதற்கும் இதுவே காரணம்' என்ற குற்றச்சாட்டை அரசு தொடர்ந்து சுமத்தி வருகிறது. மேலே சொன்ன அறிவிப்பு இதற்கு ஏற்ற தீர்வாகும்.இதன் அடிப்படையில் நாட்டில் உள்ள, 600க்கும் மேற்பட்ட சர்க்கரை ஆலைகளை, "கூலி அரவை ஆலைகள்' என்று இந்திய அரசு அறிவிக்க வேண்டும். விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை உலக சந்தையில் போட்டி போட்டு விற்பதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**ஈரோட்டில் மல்லிகை பூ விலை ரூ.600**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,03:45 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: ஈரோடு மாநகரில் மல்லிகை பூ விலை கிலோ 600 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.ஈரோடு மாநகரில் பி.எஸ்.பார்க், ஈஸ்வரன் கோவில் தெரு, வீரப்பன்சத்திரம், காந்திஜி ரோடு, சூரம்பட்டி நால்ரோடு, ஜி.ஹெச்., பகுதி என பல இடங்களில் சில்லரை, மொத்த வியாபார பூ கடைகள் உள்ளன.இக்கடைகளுக்கு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து மல்லிகை பூ விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

முகூர்த்தம், சுப காரியங்கள், பல்வேறு விசேஷ நிகழ்ச்சிகளை முன்னிட்டு கடந்த இரண்டு மாதமாகவே மல்லிகை பூ தேவை அதிகரித்தது. அதேவேளை கடந்த மாதத்தில் தொடர் மழை, பருவநிலை மாற்றத்தால் மல்லிகை வரத்து குறைந்தது.

இதனால், பூ மல்லிகை பூ விலை விறுவிறுவென ஏறத் துவங்கியது. ஒரு மாதத்துக்கு முன் சில்லரை விலையில் கிலோ 200 முதல் 300 ரூபாய்க்கு விற்ற மல்லிகை, நேற்று 600 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரத்தில் அதிகபட்சம் 750 ரூபாய் வரை விற்கப்பட்டது.எவ்வளவு விலையேறினாலும் பெண்களிடம் மல்லிகை பூ வாங்கும் ஆர்வம் துளியும் குறையவில்லை.
குறைந்தபட்சம் 50 கிராம் அளவிலாவது வாங்கி சரமாக்கி தலையில் சூடி மகிழ்கின்றனர்.

**ஈரோட்டில் கரும்பு விற்பனை சூடுபிடிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,03:42 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு:ஈரோடு மாநகரில் செங்கரும்பு விற்பனை சூடுபிடித்துள்ளது.தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை ஆண்டு தோறும் ஜனவரி 15ம் தேதி கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகையின் முக்கிய அம்சமான சர்க்கரை பொங்கலும், கரும்பும் அனைத்து வீடுகளிலும் இடம்பெறும். டிசம்பர் மாத துவக்கத்திலேயே அதிகளவில் செங்கரும்பு அறுவடை செய்து, விற்பனைக்கு வரத்துவங்கும்.அந்த வகையில் ஈரோடு மாநகரில் பொங்கலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பே செங்கரும்பு விற்பனைக்கு வரத்துவங்கியது.

சங்ககிரி, மகுடஞ்சாவடி, மேட்டுக்கடை, பள்ளிபாளையம், குமாரபாளையம், சமயச்சங்கிலி, சத்தி, கோபி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.ஈரோடு வீரப்பன்சத்திரம், கொல்லம்பாளையம், சூரம்பட்டி, பி.எஸ்.பார்க்., உள்பட பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் நேரடியாக விவசாயிகள், வியாபாரிகள் கடையிட்டு விற்பனை செய்கின்றனர்.கரும்பு ஜோடி 30 முதல் 50 ரூபாய் வரை விற்கின்றனர். வீட்டிலுள்ள குழந்தைகள், பெரியவர்கள் சாப்பிடுவதற்காக பொதுமக்கள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். பொங்கல் பண்டிகை நெருங்கும் போது, கரும்பு வரத்தும் பல மடங்கும் உயரும். விலையும் ஜோடிக்கு 20 முதல் 50 ரூபாய் வரை அதிகரிக்கும்.தற்போதை விட சுவை அதிகமுள்ள கரும்புகள் இன்னும் ஓரிரு வாரத்தில் வருமென்பதால், அதை வாங்கி சுவைக்க மக்கள் காத்திருக்கின்றனர்.

**கொப்பரை உற்பத்தியால் குவிந்த சிரட்டைகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,03:37 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில் தேங்காய் உற்பத்தி, கொப்பரை உற்பத்தி அதிகரித்தது. தேங்காய் சிரட்டையில் இருந்து கொசு வர்த்தி சுருள், கம்ப்யூட்டர் சாம்பிராணி தயாரிக்கும் தொழிற்சாலைக்காக குவிக்கப்பட்டுள்ளன.ஈரோடு, திருப்பூர் மாவட்டம் காங்கேயம், வெள்ளகோவில், சென்னிமலை, பெருந்துறை மற்றும் காஞ்சிகோவில் பகுதிகளில், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கொப்பரை தேங்காய் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.தோப்புகள் வைத்துள்ளவர்கள் நேரிடையாக, குத்தகைக்கும், தேங்காய்களை வாங்கி, கொப்பரைகளாக மாற்றியும் விற்பனை செய்கின்றனர்.கொப்பரை உற்பத்தியாளர்கள் தேங்காய் பிரித்தெடுக்கும் போது, மிச்சமாகும் சிரட்டைகளை ஆரம்ப காலத்தில், ஹோட்டல், பலகாரகடை, பாய்லர்கள், பொரி மண்டிகளுக்கு அடுப்பு எரிக்க விற்பனை செய்தனர். காலப்போக்கில் கொசுவர்த்தி சுருள், கம்ப்யூட்டர் சாம்பிராணி தயாரிக்க தேங்காய் சிரட்டைகள் வாங்கிச் செல்லப்பட்டு, பவுடராக அரைத்து உற்பத்திக்கான மூலப்பொருட்களாக மாற்றி பயன்படுத்துகின்றனர்.தேங்காய் கொப்பரை உற்பத்தியாளர்கள் சிரட்டை விற்பனையால் கணிசமான வருவாய் பார்க்கின்றனர். சென்னை, பெங்களூரு, வேலூர், கோவை போன்ற இடங்களில் இருந்தும், கொசுவர்த்தி சுருள் உற்பத்தி கம்பெனிகள், விவசாயிகள் மற்றும் கொப்பரை உற்பத்தியாளர்களுடன் ஒப்பந்த அடிப்படையில் வாங்கிச்செல்கின்றனர்.

காஞ்சிகோவில் பகுதிகளில், நூற்றுக்கும் மேற்பட்ட சிறு மற்றும் பெரிய அளவிலான கொப்பரை உற்பத்தியாளர்கள் உள்ளனர். தினமும் 2 டன் அளவுக்கு தேங்காய் சிரட்டைகள் சேருகின்றன. பெங்களூருவை சேர்ந்த பெரிய கம்பெனிகள், டன் ஒன்றுக்கு 4,500 ரூபாய் வரையிலும் கொடுத்து வாங்கிச்செல்கின்றன.சில்லரை விற்பனையில், அடுப்புகள் மற்றும் பாய்லர்களுக்கு எரியூட்ட 20 கிலோ மூடைகள், 140 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஆபரண பொருட்கள் தயாரிக்கவும் சிரட்டைகளை வாங்கிச் செல்கின்றனர். கடந்த ஒரு மாதமாக, ஈரோடு மாவட்டத்தில் தேங்காய் உற்பத்தி கடந்தாண்டை விட அதிகரித்துள்ளது. உற்பத்தி அதிகரிப்பால், விலை சற்று குறைந்ததால், கொப்பரை உற்பத்தியாளர்கள், கூடுதலாக வாங்கி, உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொப்பரை உற்பத்தி அதிகரித்ததால், விற்பனைக்கான சிரட்டையும் அதிகரித்துள்ளது. தினமும் 4 முதல் 5 டன் சிரட்டைகள் வரை சேர்ந்து விவசாயிகள் வருவாயை எதிர்பார்த்துள்ளனர்.

**கோவில்பட்டி பகுதியில் சூரியகாந்தி விளைச்சல் அமோகம்...!**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,02:37 IST

கருத்தை பதிவு செய்ய

கோவில்பட்டி : கோவில்பட்டி பகுதியில் சூரியகாந்தி பயிர்கள் அமோகமாக விளைந்து வித்துக்கள் உருவாகும் தருணத்தில் வளர்ந்துள்ளது. சூரியகாந்தி வித்தில் தயாராகும் எண்ணையின் தேவை அதிகமிருப்பதால் அதிகவிலை கிடைக்க வாய்ப்புகள் இருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் காத்திருக்கின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி கோட்டப்பகுதிகளை சேர்ந்த கோவில்பட்டி, விளாத்திகுளம், எட்டயபுரம், ஓட்டப்பிடாரம் ஆகிய 4 தாலுகாக்களிலும் மானாவாரி விவசாயமே பிரதானமாக இருந்து வருகிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் மழை பெய்யும் காலத்தையும், மழையின் அளவையும், பயிர்களுக்குரிய பருவத்தையும் கணக்கிட்டு விவசாயம் செய்து வருகின்றனர். பொதுவாக பருவத்தில் பெய்ய வேண்டிய மழை ஒழுங்காக பெய்யாமல் கெடு த்தால் அப்பொழுதெல்லாம் விவசாயிகளுக்கு எப்போதும் கைகொடுத்து உதவும் தோழனாக இருப்பது சூரியகாந்தி பயிர்கள் தான் என்கின்றனர். சூரியகாந்தி பயிர் விளைச்சலுக்கு மழை பெய்தாலும், பெய்யாமல் போனாலும் பிரச்னை இல்லை என்கின்றனர். மேலும் சூரியகாந்தி பயிர்களின் வேர்கள் நிலத்தில் ஆழமாக செல்வதால் இருக்கின்ற ஈரப்பதத்திலேயே வளர்ச்சியடையும் தன்மை கொண்டது என்கின்றனர். கோவில்பட்டி பகுதியில் வழக்கம்போல் இந்தாண்டும் மழை பெய்வதுபோல் பெய்துவிட்டு ஓய்வெடுத்துக்கொண்டது. இன்னும் ஒருசில இடங்களில் மானாவாரி பயிர்களுக்கு ஒத்துவராத அடைமழையாக பெய்து பாதிப்பை ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கோவில்பட்டி கோட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் சூரியகாந்தி பயிரை தேர்ந்தெடுத்து பயிரிட்டுள்ளனர். இந்தாண்டு மழைச்சீசன் முடிந்ததாக கருதப்பட்ட ஐப்பசி மாதக்கடைசியில் சூரியகாந்தி பயிர் செய்ய விதைத்துள்ளனர்.

பொதுவாக சூரியகாந்தி பயிர் 90 நாட்களில் மகசூல் கொடுக்கும் பயிராகவே இருந்து வந்தது. ஆனால் தற்போது இதிலும் நவீன யுக்தியை கொண்டு ஹைபிரேட் ஒட்டுரகம் என்றதொரு சூரியகாந்தி விதைகளை கண்டுபிடித்து 75 நாட்களில் மகசூல் கிடைக்கும் பயிராக மாற்றி இருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். இவ்வாறு நவீன ஒட்டுரக சூரியகாந்தி பயிர்கள் மட்டுமின்றி அனைத்து வகையான சூரியகாந்தி பயிர்களுக்கும் பயிர் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் மிகவும் குறைவு என்கின்றனர். மேலும் மற்ற மானாவாரி பயிர்களைப்போல், உழவு செய்து விதைத்து, உரமிட்டு, மருந்தடித்து, களையெடுத்து, நோய் தாக்குதலில் இருந்து பாதுகாத்து விவசாய நிலமே கதியென்று இருக்க வேண்டிய நிலை சூரியகாந்தி பயிர்களில் இல்லையென்று கூறுகின்றனர். ஏனெனில் சூரியகாந்தியை பொறுத்தமட்டில் மழை பெய்து ஓய்ந்த பின்னரே

நிலத்தை உழுது பதப்படுத்தி விதைக்கப்படுகிறது. ஆகவே நிலத்தில் உழவு நடக்கும்போதே களைச் செடிகளையும் அகற்றிவிடுவதால் மீண்டும் களையெடுக்க வேண்டிய அவசியம் பெரும்பாலும் ஏற்படாது என கூறுகின்றனர். மேலும் விதைத்த சில நாட்களிலேயே செடி முளைத்து, அடுத்த சில நாட்களில் சுமார் இரண்டடி உயரத்திற்கு வளர்ச்சியடைந்து, அதற்கடுத்த சில நாட்களில் பூவும் பிடித்து விடுமென்கின்றனர். இந்தாண்டு பெரும்பாலான விவசாயிகள் வீரிய ஒட்டுரக சூரியகாந்தியையே பயிர் செய்துள்ளதால் தற்போது சுமார் 4 முதல் 5 அடிஉயரம் வரை சூரியகாந்தி செடிகள் வளர்ந்து பூக்கள் பிடித்துள்ளது. இந்த பூக்களின் மையப்பகுதியில் கிடைக்கும் வித்துக்கள் தற்போது உருவாகும் அறிகுறியுடன் செழுமையாக நிற்பதாக கூறுகின்றனர். தொடர்ந்து இன்னும் சில நாட்களில் வித்துக்கள் முழுமையாக உருவாகிய பின்னர், பூக்கள் வாடத்துவங்கி வித்துக்கள் முதிர்ச்சியடையும் என்கின்றனர். இதையடுத்து அறுவடை செய்து மிஷின்களில் கொடுத்து வித்துக்களை மட்டும் பிரித்து விற்பனைக்கு அனுப்பும் பணிகள் துவங்கும் என்கின்றனர். தற்போதைய காலகட்டத்தில் சூரியகாந்தி எண்ணெய்க்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு இருப்பதால், அதன் தேவையும் அதிகரித்துள்ளது. கடந்தாண்டு சூரியகாந்தி வித்துகள் குவிண்டால் ரூ.2 ஆயிரத்து 500க்கு விலையானது. ஏற்கனவே விலைவாசி அதிகரித்து வருவதாலும், தேவையை பொறுத்தும் கடந்தாண்டு விலையை விட, இந்தாண்டு கூடுதல் விலையே கிடைக்க வாய்ப்புகள் இருப்பதாக விவசாயிகள் கருதுகின்றனர். ஆகவே வரும் தைப்பொங்கல் திருநாளையொட்டி சூரியகாந்தி பயிர்கள் அறுவடைக்கு தயாராகிவிடும் என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகளின் ஆபத்பாந்தவான் என கருதப்படும் சூரியகாந்தி பயிர்களை பயிர் செய்துள்ள விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

**மலர் செடிகள் நடவுப் பணி வரும் 26ம் தேதி முதல் துவக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,01:03 IST

ஊட்டி : ஊட்டி தாவரவியல் பூங்காவில், கோடை சீசனுக்கான மலர் செடிகள் நடவுப் பணி, வரும் 26ம் தேதி முதல் துவங்குகிறது. கோடை சீசனின் போது, ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதற்காக, ஆண்டுதோறும் 2 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்படும்; 15 ஆயிரம் மலர் தொட்டிகளில், மலர் செடிகள் வைக்கப்படும்.
வரும் கோடை சீசனுக்காக, மலர் செடிகளை நடவு செய்ய பூங்காவில் உள்ள நாற்றங்காலில், அக்டோபர் மாதம் இறுதி முதல் விதைகள் விதைக்கப்பட்டு, நாற்றுகள் தயார்ப்படுத்தப்பட்டன. மே மாதம் நடக்கவுள்ள 116வது மலர் கண்காட்சிக்காக, மலர் செடிகளை நடவு செய்யும் பணி, வரும் 26ம் தேதி முதல் துவங்குகிறது. பூங்கா உதவி இயக்குனர் ராம்சுந்தர் கூறியதாவது: கோடை சீசனில் நடக்கும் மலர் கண்காட்சிக்காக, நடப்பாண்டு 100க்கும் மேற்பட்ட ரகங்களில், 2 லட்சம்

மலர் செடிகள் நடவு செய்யப்படவுள்ளன. முதற்கட்டமாக, டெல்பினியம், சால்வியா, ஆலி ஹாக் செடிகளின் நடவுப் பணி மேற்கொள்ளப்படும். தொடர்ந்து, மலர்கள் பூக்கும் காலத்துக்கு ஏற்ப நடவு செய்யப்படும். 28ம் தேதி முதல், 15 ஆயிரம் தொட்டிகளில் மலர் செடிகள் நடவுப் பணி துவக்கப்படும்," என்றார்.

**நிரம்பியது அமராவதி அணை மகிழ்ச்சியில் கரூர் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 19,2011,00:53 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையால் அமராவதி அணை கடந்த 54 ஆண்டுகளில் 40 முறையாக நிரம்பியுள்ளது. இதனால் கரூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியில் உள்ளனர்.திருப்பூர் மாவட்டம் உடுமலைபேட்டையில் உள்ள அமராவதி அணை மூலம் கரூர் மாவட்டத்தில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.அமராவதி ஆற்றிலிருந்து கரூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்களுக்கும் ஆழ்குழாய் கிணறு மூலம் தண்ணீர் எடுக்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழை காரணமாக வரதமாநதி, பாம்பாறு, நங்காச்சியாறு ம ற்றும் குடகனாறு ஆகிய அமராவதி ஆற்றில் கிளை ஆறுகளிலு ம் தண்ணீர் ஓடுகிறது. இதனால் அமராவதி ஆற்றில் தற்போது அதிகளவில் தண்ணீர் செல்கிறது.

இந்த நிலையில் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் வங்க கடலில் எழுந்த புயல் சின்னம் காரணமாக, அமராவதி ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கட ந்த மாதம் கனமழை பெய்தது. இதனால் அமராவதி அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது. குறிப்பாக கடந்த நவம்பர் மாத ம் 5 ம் தேதி முதல் விநாடிக்கு 3,000 கன அடி தண்ணீர் வந்தது. தொடர்ந்து 27 ம் தேதி 5.681 கன அடி தண்ணீர் வந்தது. இதனால் நவம்பர் மாதம் 65 அடியாக இருந்த நீர்மட்டம், 28 ம் தேதி இரவு 90 அடியை தொட்டது.கடந்த 20 நாட்களுக்கும் மேலாக அணை நிரம்பியிருந்தாலும், துணை ஆறுகளான குடகானாறு, பாம்பாறு, வரதமாநதி ஆகியவற்றில் மழை காரணமாக தண்ணீர் செல்வதால், அமராவதி அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

மேலும், அணைக்கு கடந்த சில நாட்களாக 400 முதல் 500 கன அடி நீர்தான் வருகிறது. இதனால் அணையில் இருந்து விநாடிக்கு 50 கன அடி தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது.கடந்த 2005 ம் ஆண்டு பெய்த கன மழையால் அமராவதி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அந்த அளவுக்கு தற்போது வெள்ளப்பெருக்கு இல்லாத நிலையிலும், துணை ஆறுகள் துணையுடன் அமராவதி

ஆற்றில் தண்ணீர் சென்ற வண்ணம் உள்ளது. மேலும், நடப்பாண்டு இறுதியில் அமராவதி அணை நிரம்பி முழு கொள்ளவை எட்டியுள்ளதால், கரூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், நெல், கரும்பு, மஞ்சள், வாழை உள்ளிட்ட பணப்பயிர்களையும், அ மராவதி ஆற்றில் தண்ணீர் செல்வதால், நிலத்தடி நீர் உயர்ந்து இருப்பாலும், மானாவாரி நிலங்களில் எண்ணை வித்துகளையும் சாகுபடி செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

**காய்கறி விலை கடும் சரிவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2011,21:30 IST

காய்கறி வரத்து அதிகரித்தும், சில்லரை வியாபாரிகளின் வருகை குறைந்துள்ளதால், கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை கணிசமாக குறைந்துள்ளது.
கோயம்பேடு மார்க்கெட்டிற்கு, காய்கறி வரத்து அதிகரித்துள்ளது. குறிப்பாக நாள் ஒன்றுக்கு 380 முதல் 400 லாரிகள் வரை தொடர்ந்து வரத்து உள்ளது. இதனால், காய்கறி விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.தக்காளி மற்றும் பெல்லாரி வெங்காயம் வரத்து கூடுதலாக 20 லாரிகள் உள்ளது. இதேபோல, பச்சை பட்டாணி சீசன் என்பதால் அதன் வரத்தும் அதிகரித்துள்ளது.

தக்காளி கிலோ 8 ரூபாயில் இருந்து 5 எனவும், பெல்லாரி வெங்காயம் 12லிருந்து 10, பச்சை பட்டாணி 70லிருந்து 30 ரூபாய் எனவும், முருங்கைகாய் 40லிருந்து 18 ரூபாய்க்கும், காலிபிளவர் பூ 8லிருந்து 5 எனவும் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கோயம்பேடு மார்க்கெட்டில் மொத்த விலையில் கிலோ ஒன்றுக்கு பீன்ஸ் 15, கேரட் 20, நூக்கல் 12, சவ்சவ் 8, பீட்ரூட் 10, பச்சை மிளகாய் 10, சேப்பங்கிழங்கு 9, சேனை 15, வெண்டை 8, அவரை 18, கோவக்காய் 12, முள்ளங்கி 8, புடலை 10, பாவற்காய் 16 ரூபாய் என விலை நேற்று குறைந்திருந்தது.

கோயம்பேடு காய்கறி மார்க்கெட் மொத்த வியாபாரி சவுந்தரராஜன் கூறுகையில், ""மார்க்கெட்டிற்கு வருவதற்கு முறையான சாலை வசதியில்லாத காரணத்தால் சில்லரை வியாபாரிகளின் வரத்து குறைந்துள்ளது. பலர் தாம்பரம், தி.நகர், பெரம்பூர் உள்ளிட்ட சில்லரை மார்க்கெட்டிலே வாங்கிக் கொள்கின்றனர். வரத்து அதிகரித்து, வியாபாரிகளின் வருகை குறைந்துள்ளதால் காய்கறி விலையையும் குறைக்க வேண்டியுள்ளது,'' என்றார்.

**பயிர் விளைச்சல் அதிகரிக்க உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும்:வேளாண் அதிகாரி "அட்வைஸ்'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2011,00:57 IST

தென்காசி : பயிர் விளைச்சல் அதிகரிக்க உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும்' என தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நாகரீக உலக முன்னேற்றத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு உணவளிக்க விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை பெருக்குவதற்காக வீரிய விஷ மருந்துகள் மற்றும் ரசாயன உரங்களை தேவைக்கு அதிகமாக பயன்படுத்தியதின் விளைவாக சுற்றுச்சூழல் சீர்கெட்டு பெரும் அபாயத்தை எதிர் நோக்கியிருக்கிற இன்றைய சூழலில் இனி வரும் காலத்தில் பயிர் சார்ந்த விவசாயம் என்பது மண் வளம் சார்ந்ததே.

மண் வளம் பேணாது மகசூல் பெற முடியாது. மண்ணின் ரசாயன மற்றும் பவுத்திக குணங்கள் பாதிப்பதோடு அதிகளவு ரசாயனங்கள் விளை பொருட்களின் மூலம் மனித உடலில் பலவித இன்னல்களை உண்டு பண்ணுகின்றன. மண் வளம் மற்றும் மனித குலத்தை பாதிக்காத உயர் உரங்களை சரியான விகிதத்தில் உபயோகித்து மகசூலை உயர்த்தி மண் வளம் காத்து மனித குலத்தையும் காக்க உயிர் உரங்கள் சிறந்த வரப்பிரசாதமாகும்.

**உயிர் உரங்களின் முக்கியத்துவம்**

காற்றிலுள்ள நைட்ரஜனை தழைச்சத்தாக மாற்றி பயிர்களுக்கு அளிக்கிறது. நுண்ணுயிர்கள் மண்ணில் இடும் பொழுது பயிர் ஊக்கிகளான இண்டோல் அசிட்டிக் அமிலம், ஜிப்ரலின் என்பவையும் வைட்டமின் சத்துக்களான பயோட்டின் மற்றும் வைட்டமின் பி யும் உற்பத்தி செய்யப்படுவதால் இளம் பயிர்கள் நன்றாக செழித்து வளரும்.

உயிர் உரங்கள் உபயோகிக்கும் போது மண்ணில் பூஞ்சான நோய் கொல்லிகள் உற்பத்தி செய்யப்படுவதால் நோயை எதிர்க்கும் சக்தி உருவாகிறது. சுற்றுப்புறச் சூழல் கெடுவதில்லை. தழைச்சத்து மற்றும் மணிச்சத்தில் 25 சதவீதம் மிச்சம் ஆகிறது.

ஒரு பொட்டலம் ரைசோபியம் என்ற உயிர் உரம் 8 கிலோ முதல் 12 கிலோ வரை நைட்ரஜனை (தழைச்சத்தை) ஒரு பயிர் பருவத்தில் மண்ணில் நிலை நிறுத்துகிறது. இந்த தழைச்சத்து 20 முதல் 30 கிலோ யூரியாவிற்கு சமம்.

**பயன்படுத்தும் முறைகள்**

ஒரு ஏக்கருக்கு தேவையான நாற்றாங்காலுக்கு சிபாரிசு செய்யப்பட்ட உயிர் உரத்தினை ஒரு பொட்டலம் கலவைக்கு அரை லிட்டர் குளிர்ந்த அரிசி கஞ்சி என்ற அளவில் கலக்க வேண்டும். இக்கலவையை விதைகளுடன் நன்கு கலந்து 30 நிமிடங்கள் நிழலில் உலர வைத்து 24 மணி நேரத்தில் விதைக்கலாம்.

நாற்றாங்காலில் இடும் போது பொட்டலம் ஒன்றுக்கு 5 கிலோ நன்கு மக்கிய தொழு உரம், இரண்டரை கிலோ மணல் என்ற விகிதத்தில் நன்கு கலக்கி நாற்று விடும் முன் அல்லது விட்ட பின் சீராக தூவி விட வேண்டும்.

இரண்டு உயிர் உர பொட்டலங்களுக்கு 15 லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கரைத்து நாற்றின் வேர் விதை கரணைகளை 15 நிமிட நேரம் நனைத்து உடனடியாக நட்டு விடலாம். நடவு வயலில் உயிர் உர பாக்கெட் ஒன்றுக்கு 5 கிலோ மக்கிய உரம், இரண்டரை கிலோ மணல் என்ற விகிதத்தில் நன்றாக கலக்கி நடவிற்கு முன், பின் சீராக தூவி விட வேண்டும்.

பூஞ்சான விதை நேர்த்தி செய்யப்பட்டிருந்தால் 24 மணி நேரம் கழித்து உயிர் உரத்தை விதையுடன் கலந்து விதைக்க வேண்டும். ரசாயன உரங்களை நேரடியாக உயர் உரங்களுடன் கலத்தல் கூடாது. சூரிய வெளிச்சம், ஈரம் நேரடியாக உயிர் உரங்களின் மேல் படாமல் பாதுகாக்க வேண்டும்.

தமிழக அரசின் வேளாண் துறையின் கீழ் நெல்லை மாவட்ட விவசாயிகளுக்காக தென்காசியில் உயிர் உரங்கள் உற்பத்தி மையம் உரிய தொழில் நுட்பங்களுடன் கூடிய ஆய்வு கூடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. தென்காசி வேளாண்மை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மை அலுவலர்கள் பாலசுப்பிரமணியன், உதயகுமார் மேற்பார்வையில் இந்த மையம் செயல்படுகிறது.

விவசாயிகள் அனைவரும் உயர் விளைச்சல் தரவல்ல உயிர் உரங்களை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் : பால் உற்பத்தி கடும் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2011,04:31 IST

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவி வருகிறது. அதனால், பால் உற்பத்தி குறைந்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். டி.என்.ஏ.,வின் அமைப்பை மாற்றி அமைத்து கொள்ளும் "மீயூட்டோ ஜெனிக்' வகையை சேர்ந்த வைரஸ் கிருமிகளால் கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்படுகிறது. தற்போது பனிப்பொழிவு அதிகரித்துள்ளதால், வாழப்பாடி பகுதியில் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய் பரவி வருகிறது. வைரஸ் கிருமியால் ஏற்படும் நோய் என்பதால், பால் உற்பத்தி குறைந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, வாழப்பாடி பகுதியில் பரவி வரும் கோமாரி நோயை கட்டுப்படுத்த கால்நடை பராமரிப்புத்துறையினர் சிறப்பு முகாம்கள் நடத்தி கால்நடைகளுக்கு இலவசமாக தடுப்பூசி போடவும், மருந்து மாத்திரைகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, வாழப்பாடி பகுதியில் திங்கள்கிழமை தோறும் கூடும் மின்னாம்பள்ளி மாட்டுச்சந்தை மற்றும் பேளூர் ஆட்டுச்சந்தைகளுக்கு வரும் விவசாயிகளின் கால்நடைகளுக்கும் இலவச கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்கு சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அது குறித்து, பால் உற்பத்தியாளர் நல சங்க நிர்வாகி வக்கீல் ராஜேந்திரன் தெரிவித்ததாவது: வாழப்பாடி பகுதியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவி வருகிறது. குறிப்பாக, கறவை மாடுகளை கோமாரி நோய் தாக்கி வருகிறது. ஒருமுறை கோமாரி நோயால் தாக்கப்படும் கறவை மாடுகளின் கறக்கும் திறன் வாழ்நாள் முழுவதும் குறைந்து விடுகிறது. எனவே, கோமாரி நோயை கட்டுப்படுத்த கால்நடை பராமரிப்புத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும், என்றார்.

**செம்மை கரும்பு சாகுபடி முறையில் கூடுதல் மகசூல்: வேளாண் அதிகாரி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2011,05:16 IST

மோகனூர்: "கரும்பு சாகுபடி செய்ய ஆர்வம் உள்ள விவசாயிகள், புதிய சாகுபடி தொழில் நுட்பமான, செம்மை கரும்பு சாகுபடி முறையை கையாண்டு, அதிக மகசூல் பெறலாம்' என, மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மோகனூர் வட்டாரத்தில், 1,500 ஏக்கர் வரை கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள், புதிய சாகுபடி தொழில் நுட்பமான, "செம்மை கரும்பு சாகுபடி' முறையை கையாண்டு அதிக மகசூல் பெறலாம். சாதாரணமாக, கரும்பு நடவு வரிசைக்கு வரிசை மூன்று அடி பார் அமைத்து, இருபரு கரணை அல்லது ஒரு பரகரணை தொடர் நடவின் மூலம் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
இம்முறையில் நடவு செய்யும் கரும்பு அறுவடைக்கு வரும்போது, அறுவடை இயந்திரம் கொண்டு அறுவடை செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. அதனால், அறுவடை கூலி அதிகமாகிறது.

மேலும், நேரடி நடவின் மூலம் கரும்பின் எண்ணிக்கை குறைவதுடன், ஏக்கர் மகசூலும் குறைந்து, சராசரியாக ஏக்கருக்கு, 40 டன் வரை மட்டுமே மகசூல் கிடைத்து வருகிறது. செம்மை கரும்பு சாகுபடி முறையில், ஒற்றை பரு, கரும்பில் இருந்து பிரித்தெடுத்து குழி தட்டு முறையில் நாற்றங்கால் தயார் செய்து, 30 முதல், 35 நாட்கள் வரை நிழற்கூடத்தில் வைத்து வளர செய்து, பின் நாற்றினை எடுத்து ஒரு ஏக்கருக்கு, 5,000 நாற்றுகள் வீதம் ஐந்து அடி பார் அமைத்து வரிசையில் இரண்டு அடிக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும். இம்முறையில், குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனத்துடன் நீரில் கரையும் உரமும் மானியத்தில் வழங்க, அரசு அனுமதி அளித்துள்து. சொட்டு நீர் பாசனத்துடன் கூடிய கரும்பு சாகுபடி செய்வதால், ஏக்கருக்கு குறைந்த பட்சமாக, 70 மெட்ரிக் டன் வரை மகசூல் பெறலாம். மோகனூர் வட்டாரத்தில், இம்முறையின் மூலம் கரும்பு நடவு செய்ய, 20 ஏக்கர் பரப்புக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, கரும்பு சாகுபடி செய்ய ஆர்வம் உள்ள விவசாயிகள், உடனடியாக வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு தங்கள் பெயரை முன்பதிவு செய்து பயன்பெறலாம்.

**விவசாயிகள் பெயரில் மஞ்சள் விற்பனை**
பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2011,03:52 IST

கோபிசெட்டிபாளையம்: கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெயரில் மஞ்சள் விற்பனை செய்து, பல கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்யப்பட்டதை வருமான வரித்துறை கண்டுபிடித்துள்ளதால்,

மஞ்சள் வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் பாசனம், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., ஆகிய பாசனங்களில் ஒரு லட்சம் ஏக்கர் வரை மஞ்சள் பயிரிடப்படுகிறது. ஈரோட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிமார்க்கெட், ஈரோடு மற்றும் கோபி சொசைட்டி மூலம், விவசாயிகள் மஞ்சள் விற்பனை செய்கின்றனர். மஞ்சள் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
கூட்டுறவு சொசைட்டிகளில் மஞ்சள் விற்பனை செய்த விவசாயிகளுக்கு, 2008-09 ம் ஆண்டு மஞ்சள் கொள்முதல் தொடர்பாக, 12 வகையான கேள்விகள் கேட்டு, ஈரோடு வருமானவரித்துறை நோட்டீஸ் அனுப்பி உள்ளது. விவசாயிகளுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில் வருமான வரித்துறை அனுப்பிய நோட்டீஸால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சொசைட்டிகளில் மஞ்சள் விற்பனை செய்யும் சிறு, குறு விவசாயிகள், தாங்கள் கொண்டு வரும் மஞ்சள் மூட்டைகளை விற்பனை செய்து விட்டு, பணத்தை வாங்கி சென்று விடுகின்றனர். அதற்கு பில் எதுவும் கொடுப்பது கிடையாது. ஆனால், இந்த பில்லை வியாபாரிகள், தொழில் அதிபர்கள் தங்கள் பெயரில் வாங்கி, வருமான வரி விலக்கு பெற்றுள்ளனர்.
மஞ்சள் விற்பனையில் விவசாயிகள் மட்டுமின்றி, தொழில் அதிபர்கள், டாக்டர்கள், இன்ஜினியர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் பலர் விவசாயிகள் பெயரில் மஞ்சள் விற்பனை செய்து, பல கோடி ரூபாய் வரி விலக்கு பெற்றுள்ளதை, வருமான வரித்துறை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். உண்மையான விவசாயிகள் யார் என்பது குறித்து தெரிந்து கொள்ளும் வகையில், வருமான வரித் துறையினர் விவசாயிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளனர். இந்த விவகாரம், பூதாகரமாக வெடித்துள்ளது. வரி ஏய்ப்பு குறித்து வருமான வரித்துறை முழுமையாக ஆய்வு செய்தால், பல வியாபாரிகள் சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் பெயரில் போலியாக மஞ்சள் விற்பனை செய்த வியாபாரிகள் பலர் கலக்கத்தில் உள்ளனர்.

**துல்லிய பண்ணையம்அமைக்க மானியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2011,22:53 IST

வடமதுரை : துல்லிய பண்ணையம் அமைக்க மானியம் வழங்கப்படுவதாக வடமதுரை வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது: இந்த ஆண்டு வடமதுரை வட்டாரத்தில் தென்னம்பட்டி, பிலாத்து, பாகாநத்தம் ஆகிய பகுதிகளில் துல்லிய பண்ணையம் அமைக்க பயனாளிகள் தேர்வு பணி நடக்கிறது. கரும்பு, மக்காசோளம் பயிர்களில் 50 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனம்

அமைத்தல், நீரில் கரைந்து சொட்டு நீர் பாசனம் மூலம் சென்று பயிர்களுக்கு விரைவில் கிடைக்க வைக்கும் உரங்கள் வழங்கப்படவுள்ளது. திட்டத்தில் பங்கேற்க குறைந்தது ஒரு ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட வேண்டும். இதில் 25 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்கு முன்னுரிமை. ஆர்வமுள்ள விவசாயிகள் சிட்டா, அடங்கல், வரைபடம், போட்டோவுடன் உதவி வேளாண்மை அலுவலகத்தை அணுகலாம், என்றார்.

**அறுவடைக்கு வரும் தஞ்சை வண்டிகள் கூடுதல் வசூல்: குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2011,22:59 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் : ராமநாதபுரத்தில் நெல் அறுவடைக்கு வரவழைக்கப்படும் தஞ்சாவூர் வண்டிகள், தாறுமாறாக வாடகை வசூலிப்பதாக குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர். ராமநாதபுரத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் அருண்ராய் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., ஜெயராமன், வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன், கூட்டுறவு இணை பதிவாளர் கல்யாணி பங்கேற்றனர். விவசாயிகளின் விவாதம்:

சிவனாண்டி: களரி கண்மாய் மடைகள் மூலம் தண்ணீர் செல்ல வரத்துக்கால்வாய்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவை ஆழம் அதிகரித்து, அகலம் குறைவாக உள்ளது. விவசாயத்துக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாது. மண் நிரம்பினால் அதை அள்ள கூட அகலம் இல்லை.

கண்ணப்பன்: அறுவடைக்கு தஞ்சாவூரிலிருந்து வண்டிகள் வருகின்றன. இவர்கள் பேசி வைத்தாற்போல் ஏக்கருக்கு 2,000 ரூபாய் வரை வாடகை வசூலிக்கின்றனர்.

எனவே வேளாண் பொறியியல் துறை சார்பில், அறுவடை இயந்திரங்கள் குறைந்த வாடகைக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரை வீரன்: கிராம சபை கூட்டம் நடத்தும்போது, துணை பி.டி.ஓ., ஊராட்சி தலைவர், துணை தலைவர், ஊராட்சி செயலாளர் மட்டுமே உள்ளனர். கிராமத்தில் உள்ள மக்களிடம் சொல்லாமல், கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படுகிறது.

முத்துக்கருப்பன்: ராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக்கல்லூரி அமைக்க வேண்டும். மஞ்சக்கொல்லைக்கு பஸ் விட வேண்டும்.

பாலகிருஷ்ணன்: சக்கரக்கோட்டை கண்மாயை தூர்வார வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.

தினகரன்

முல்லைப் பெரியாறு போராட்டத்தால் ஏலக்காய் வர்த்தகத்தில் ரூ.70 கோடி இழப்பு

பதிவு செய்த நாள் : 12/19/2011 12:17:30 AM



குமுளி : முல்லைப் பெரியாறு அணை தொடர்பான போராட்டம் காரணமாக, ஸி70 கோடி மதிப்பிலான ஏலக்காய் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழக எல்லையில் உள்ள கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் சுமார் 33 ஆயிரம் ஹெக்டேரில் ஏலக்காய் பயிரிடப்பட்டுள்ளது. இவற்றில் 60 சதவீத தோட்டங்கள் தமிழர்களுக்கு சொந்தமானவையாகும். இதில் சுமார் 20 ஆயிரம் தமிழக தொழிலாளர்கள் தினமும் எல்லையை கடந்து சென்று, வேலை செய்து வருகின்றனர். அறுவடை செய்யப்பட்ட ஏலக்காய் தினமும் ஏலம் விடப்படுவது வழக்கம். இதன் மூலம் சராசரியாக தினமும் ஸி5 கோடிக்கு வர்த்தகம் நடக்கும்.

இந்நிலையில், முல்லைப் பெரியாறு அணை பிரச்னை தொடர்பான போராட்டம் 2 வாரத்துக்கும் மேலாக தொடர்வதால், இரு மாநிலங்களுக்கு இடையிலான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஏலக்காய் விவசாயிகள், தொழிலாளர்கள், லாரி உரிமையாளர்கள் மற்றும் அது தொடர்பான தொழிற்சாலை அதிபர்கள் ஆகியோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

Ôகடந்த 5ம் தேதி முதல் ஏலக்காய் ஏலம் விடப்படவில்லை. மேலும், ஏலக்காய் ஏற்றப்பட்ட லாரிகள் வெளியேற முடியாமல் கிடங்கிலேயே நிறுத்தப்பட்டுள்ளன. 14 நாட்களாக வர்த்தகம் முடங்கியதால், சுமார் ரூ.70 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளதுÕ ஏலக்காய் வர்த்தக நிறுவன மேலாளர் ஒருவர் தெரிவித்தார்.

## 2015ல் தேயிலை வர்த்தகம் ரூ.33,000 கோடியை தொடும்

பதிவு செய்த நாள் : 12/19/2011 12:18:07 AM



புதுடெல்லி : வரும் 2015ம் ஆண்டுவாக்கில் நாட்டின் தேயிலை தொழில் துறை வர்த்தகம் ரூ.33,000 கோடியை தொடும். உலக அளவில் தேயிலை உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்து நம்நாடு 2ம் இடம் வகிக்கிறது. அத்துடன், உலகின் மொத்த தேவை உற்பத்தியில் 30 சதவீதத்தை இந்தியா தருகிறது. தேயிலையின் மகத்துவம் பற்றி விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் தேவையும் அதிகரித்துள்ளது.

அதனால், தற்போது 15 சதவீத வளர்ச்சியுடன் ரூ.19,500 கோடியாக உள்ள தேயிலை தொழில்துறை வர்த்தகம், 2015ல் ரூ.33,000 கோடியை தொடும். இந்த ஆண்டு ஜனவரி&அக்டோபரில் 84.7 கோடி கிலோ தேயிலை உற்பத்தியானது. கடந்த ஆண்டில் இது 81.4 கோடியாக இருந்தது. இத்துறையில் தற்போது நேரடி மற்றும் மறைமுகமாக 35 லட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளதாக அசோசேம் பொது செயலர் ராவத் தெரிவித்தார்.

*உற்பத்தி அதிகரிப்பு – ஏற்றுமதி குறைவு நறுமண பொருள்கள் விலை சரிந்தது*



*பி கே கிருஷ்ணகுமார்,கொச்சி*

*உற்பத்தி அதிகரித்துள்ள நிலையிலும் ஏற்றுமதி குறைந்து போனதால் நறுமண பொருள்கள் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.*

*கையிருப்பு*

*நடைமுறை மூலதன வசதிகள் இல்லாத நிலையில், வர்த்தக நிறுவனங்கள் மிளகாய், மஞ்சள் மற்றும் சீரகம் போன்ற நறுமண பொருள்களை அதிக அளவில் கையிருப்பு வைத்துள்ளன. கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் இவ்வகை பொருள்களின் விலை முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

*தற்போது, மிளகாய் விலை கிலோ ரூ.45–50 என்ற அளவில் உள்ளது. அதாவது, கடந்த பருவத்தின் விலையை காட்டிலும் பாதியாக குறைந்துள்ளது. மிளகாய் உற்பத்தி 10–15 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், விலை மேலும் சரிவை எதிர்கொள்ளும் என கூறப்படுகிறது. மழை குறைவு, பூச்சி தாக்குதல் போன்றவற்றால் சிறிது பாதிப்பு ஏற்படவில்லை என்றால் உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என்று விஜயகிருஷ்ணா நறுமண பொருள் பண்ணையின் நிர்வாக இயக்குனர் ரவிபதி பேரையா கூறினார்.*

*கடன்களுக்கான வட்டி விகிதங்கள் அதிகரித்துள்ளதால், அதிக அளவு கையிருப்பு வைப்பது லாப வரம்பை பாதிக்கும் என்றும், ரூபாய் மதிப்பு சரிந்துள்ள நிலையில் ஏற்றுமதி அதிகரித்து லாபம் ஈட்டும் வாய்ப்புகள் பிரகாசமாக இல்லை எனவும் இத்துறை சார்ந்த நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*மஞ்சள்*

*கடந்த பருவத்தில், மஞ்சள் விலை கிலோவுக்கு ரூ.170 என்ற அளவில் உயர்ந்தது. தற்போது ரூ.55–ஆக குறைந்துள்ளது. சீரகம் உற்பத்தியும் கணிசமாக அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பினால் அதன் விலையும் குறைந்துள்ளது. ஏலக்காய் விலையும் கிலோவுக்கு ரூ.1,000 என்ற நிலையிலிருந்து சுமார் ரூ.500–ஆக சரிந்துள்ளது.*